**04.03.2026**

கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் )

விழுப்புரம்.

**OS.435/2023**

வா.சா. **1**

பெயர். திரு. முருகன்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு உதவியாளர் அவர்களால் சத்தியபிராமணம் செய்விக்கப்பட்டார்.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

1ம் பிரதிவாதி எனது தகப்பனார். 2 முதல் 4 பிரதிவாதிகள் எனது தம்பிகள் ஆவார்கள். நான் பொது சொத்தில் ஐந்தில் ஒரு பாகம் எனக்கு வேண்டும் என்று கேட்டு பாக வழக்கு போட்டுள்ளேன். மொத்தம் எத்தனை அயிட்ட சொத்துக்களுக்கு வழக்கு போட்டுள்ளேன் என்றால், எனக்கு ஞாபகம் இல்லை. எவ்வளவு விஸ்தீரணம் கொண்ட சொத்துக்களுக்கு நான் வழக்கு போட்டுள்ளேன் என்றால், 3 ஏக்கருக்கும் குறைவாக இருக்கும். இந்த சொத்து எனது குடும்பத்திற்கு எப்படி வந்தது என்று சொல்ல முடியுமா என்றால், மூதாதையர்கள் வழிவந்த சொத்து ஆகும். மூதாதையர் சொத்து என்றால் எனது அப்பாவிற்கு முன்பு எத்தனை தலைமுறை என்றால், எனது அப்பா வரைக்கும் தான் எனக்கு கணக்கு தெரியும். அதற்கு முன்பு எத்தனை தலைமுறை என்று எனக்குத் தெரியவில்லை. எனக்கு எனது அப்பாவை தெரியும். என் பாட்டியை தெரியும். அதற்கு முன்பு உள்ள மூதாதையர்களை தெரியாது. என் அப்பா, பாட்டி ஆகியோர் சுயமாக சம்பாதித்த சொத்து இதில் உள்ளதா என்றால், என் அப்பா, பாட்டி சம்பாதித்த சொத்து எதுவும் இல்லை. பாட்டி பெயரில் சொத்து உள்ளதா? என்று எனக்குத் தெரியாது. (குறுக்கு விசாரணை கேட்டுக் கொண்டதற்கு பகுதியாக நிறுத்தி வைக்கப்பட்டு ஒத்திவைக்கப்படுகிறது).